புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுன் (June) 04, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 23 • விலை(PRICE) ரூ.6.00

# சென்னையில் கழகம் ஆர்ப்பாட்டம்

## பாஜகவின் மும்மொழித் திணிப்பை தமிழ்நாடு அரசு ஏற்கக்கூடாது!

**பி.எம்.ஸ்ரீ, சி.பி.எஸ்.சி பாடத்திட்டத்தின் வழியாக ஒன்றிய ஆட்சி திணிக்கும் மும்மொழிக்கொள்கையை தவெக ஆட்சி ஏற்கக்கூடாது என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

"ஒன்றிய அரசே! பாடத்திட்டத்தில் இந்தியைத் திணிக்காதே! தமிழ்நாடு அரசே! பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை அனுமதிக்காதே" எனும் உரிமை முழக்க ஆர்ப்பாட்டம், 30/5/26 (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு சென்னை எழும்பூர் ராஜரத்தினம் திடல் அருகில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில், மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், இரண்யா ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் நோக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி - லதா - சத்யா குழுவினரின் பாடல்கள் உணர்வூட்டின. ராஜா தமிழ்தேச மக்கள் முன்னணி மும்மொழிக்கொள்கையின் ஆபத்துகளை படம்பிடித்துக் காட்டினார். தபசி குமரன் "தவெக அமைச்சர்கள் வெளிப்படுத்தும் கருத்துகளில்" அதிருப்தியை வெளிப்படுத்தினார், திமுக வழக்கறிஞர் ஆலிம் அல்புகாரி "கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு பின்னுள்ள பதட்டத்தையும் எச்சரிக்கை உணர்வை உருவாக்கிய அரசியல் சூழ்நிலையையும்" எடுத்துரைத்தார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். அவரது உரையிலிருந்து; தேர்தல் தோல்வி தந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாது உள்ள நிலையில் அடுத்து எந்த திசை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்ற வெளிச்சத்தைத் தரும் நோக்கத்தில் தான் இந்த ஆர்ப்பாட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது என்றார்.

த.வெ.க பதவியேற்ற நிலையில் ஒன்றிய ஆட்சி "பி.எம். ஸ்ரீ" மாடல் பள்ளிகளை தமிழ்நாட்டில் தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறது. ஏற்கனவே திராவிட மாடல் ஆட்சியில் உறுதியாக நிராகரித்த திட்டத்தை இப்போது ஏன் மீண்டும் வலியுறுத்த வேண்டும்?

கல்வி அமைச்சர் ராஜ்மோகன் மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம் என்று அறிவித்த நிலையில் பி.எம்.ஸ்ரீ திட்டத்தை பரிசீலிப்போம் என்று கூறியிருப்பது சந்தேகத்தை எழுப்புகிறது. ஏற்க மாட்டோம் என்ற உறுதியான குரல் வரவேண்டும் என்பதை இந்த ஆர்ப்பாட்டத்தின் வழியாக வலியுறுத்துகிறோம்.

அதேபோல் தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.சி பள்ளிகளில் 9-ம் வகுப்பில் மும்மொழித் திட்டத்தை திடீரென ஒன்றிய பாஜக ஆட்சி கடந்த மே-15ஆம் தேதி ஒரு சுற்றறிக்கையை அனுப்பி திணித்திருக்கிறது. 9-ம் வகுப்பில் 2 இந்திய மொழிகளை தவிர மூன்றாவதாக ஒரு அந்நிய மொழியை படிக்க வேண்டும் என்பது அந்த சுற்றறிக்கை. திணிக்கப்பட்ட இந்த மூன்றாவது மொழிக்கு பாடங்கள் இல்லை; தேர்வு இல்லை; ஆனால் மொழிக் கல்வியை கட்டாயம் கற்க வேண்டும் என்கிறார்கள். அடுத்த ஆண்டு 10-ம் வகுப்புக்கு இது விரிவாக்கம் பெறுகிறது. 10-ம் பொது தேர்வை சந்திக்கும் மாணவர்களுக்கு இது மன அழுத்தத்தை உருவாக்குகிறது என்று பெற்றோர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இவர்கள் கூறும் 3-வது மொழிப் பாடமாக பிரஞ்சு, ஜெர்மன், உருது போன்ற மொழிகளைத் தேர்வு செய்ய வாய்ப்பே இல்லை. இந்த மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களே இல்லை.

3-வது மொழியாக சமஸ்கிருதம் படிப்பதற்கு மட்டும் கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருதத்திற்கு ரூ.2532 கோடி நிதி ஒதுக்கி சமஸ்கிருதம் கற்பிப்பதற்கு பார்ப்பன ஆசிரியர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்திக்குக் கூட ரூ.426 கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளது. எப்படியாவது சமஸ்கிருதத்தை சி.பி.எஸ்.சி பள்ளிகளில் அறிமுகப்படுத்திட வேண்டும் என்று ஒன்றிய பாஜக ஆட்சி துடிக்கிறது. தவெக ஆட்சி இது குறித்து எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. ஆச்சரியம் என்னவென்றால் பாஜக தலைவராக இருந்த அண்ணாமலையையே இதை எதிர்த்திருப்பது தான். அதேபோல் நீட் தேர்வு சந்தி சிரிக்கிறது நீட் தேர்வு முறையில் மாற்றம் வேண்டும் என்று சில அமைப்புகள் கூறுகின்றன. ராகுல்காந்தி நீட் தேர்வு முறையில் மாற்றத்தையே வலியுறுத்துகிறார். நீட் தேர்வு வேண்டாம் என்று நாம் கூறுகிறோம். இத்தகைய 'வடிகட்டும்' தேர்வு முறை சமூக நீதிக்கு எதிரானது என்பதுதான் பெரியார் கருத்து; பத்தாம் வகுப்பிலேயே பொதுத் தேர்வு எழுதுவதற்கு முன் வடிகட்டும் தேர்வு முறை எதிர்த்து போராடி பெரியார் அந்த தேர்வை நிறுத்தினார்.

தொடர்ந்து பேசுகையில் பெரியார் இயக்கம் தமிழர்களின் முதன்மையான எதிரியாக முன்னிறுத்துவது பார்ப்பனியத்தையும் அதை கட்டமைத்தவர்களின் ஜாதியையும் தான். அதன் அரசியல் வடிவம் பாஜக.

திராவிட மாடல் ஆட்சியை நடத்திய நமது முன்னாள் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தேர்தல் களத்தை டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான தேர்தலாகவே அறிவித்து களம் கண்டார். இதுதான் பெரியார் இயக்கத்தின் குரல்! தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்தாலும் நமது செயல்பாடுகள் தொடர்ந்து எதிரியை நோக்கிய எதிர்ப்புக் களமாகவே இருக்கும். அதுவே நமக்கு பெரியார் காட்டிய கொள்கை வெளிச்சம்.

### பாஜகவும் அதன் பார்ப்பனியமுமே நமது முதன்மை எதிரி!

முதன்மை எதிரிகளுடன் சமரசங்களோடு தடுமாற்றங்கள் உருவாகும் போது திராவிடர் விடுதலைக் கழகம் அதை ஏற்காது. அந்தத் திசையை நோக்கி தவெக பயணித்தால் நாம் உறுதியாக எதிர்த்து நிற்போம். திராவிடர் விடுதலைக் கழகம் தேர்தல் அரசியலில் பங்கெடுக்காத இயக்கம்; இதுவே நமது இயக்கத்தின் வலிமை!. முதலமைச்சர் பதவி தன்னைத் தேடிவந்த போது ஒதுக்கித் தள்ளினார் பெரியார். இந்த தனித்துவத்துடன் திராவிட மாடல் ஆட்சி ஒன்றிய இந்துத்துவ பார்ப்பனியத்துக்கு எதிரான கொள்கைப் போராட்டத்தில் உறுதியாக நின்றது. அந்தக் கொள்கை உறுதி தொடரும்; தொடர வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். பெரியார் தந்த அணுகுமுறையும் கொள்கை வெளிச்சமும் தான் எப்போதும் நமக்கு வழிகாட்டியாக இருக்கும். அந்த தனித்தன்மையோடு பார்ப்பனியத்தையும் அது கட்டமைத்த ஜாதி சமூகத்துக்கும் எதிராக சமூக மாற்றத்தை நோக்கி நமது போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்போம் என்று கூறினார்.

**தோழர்கள் அலெக்ஸ், ஸ்டான்லி ஆகியோர் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.**

தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வ. வேலு, திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர்கள் சு. கோபிநாத், சே. ராஜேஷ், த.நா. சூர்யா மற்றும் ரங்கநாதன், எம்ஜிஆர் நகர் துரை, அசோக், கடலூர் சிவகுமார், சதீஷ், பெருமாள், ஏசுகுமார், சுகுமார், கார்த்தி ராஜேந்திரன், ராஜேந்திரன், திருவொற்றியூர் துரை, தினகரன், மாஸ்டர்.பிரகாஷ், சைதை சிவா, சிகாமணி, தமிழ்ச்செல்வன், கவுரிசங்கர், விஜயபிரதாபன், முரளி கிருஷ்ணன், சாய் சரண், ரோகேஷ், ஹானஸ்ட் ராஜ், ஜேம்ஸ், மனோகர், மயிலை சிவா, முழக்கம் உமாபதி, தாமரை, மனோஜ்குமார், பிரசாந்த், (தமிழ்நாடு மாணவர் கழகம்), பாரி சிவா, கனிகா செல்வன், இனியவன், விஜய்குமார், ராஜன், விஜயன், லட்சுமணன் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் இளவரசன், குறளரசி, குடிஅரசு உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## 'திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்' ஆவணப்படத்திற்கு தடை ஏன்?

**மத நல்லிணக்கத்தை பேசும் "திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்" ஆவண படத்தை புதுக்கோட்டையில் திரையிட காவல்துறை மறுத்துள்ளது வன்மையான கண்டனத்திற்கு உரியது. வீதி கலை இலக்கிய களம் என்ற அமைப்பு இந்த படத்தை திரையிடும் முயற்சிகளில் ஈடுபட்டது. திராவிட மாடல் ஆட்சியில் கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து தமிழ்நாடு முழுதும் எந்த தடையுமின்றி இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டு வந்தது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்திலும் திரையிடப்பட்டது.**

**'திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றுவோம்!' என்ற வெறிக்கூச்சலோடு மதவாத சக்திகள் சட்டங்களை கையில் எடுத்துக் கொண்டு செயல்பட்டதையும்; நீதிமன்ற தீர்ப்பின் முரண்பாடுகளையும் இந்த ஆவணப்படம் அம்பலப்படுத்துகிறது.தமிழ்நாட்டில் மதக் கலவரத்தை உருவாக்கும் இந்த முயற்சியை திராவிட மாடல் ஆட்சி உறுதியாக முறியடித்தது. காவல்துறை அனுமதி மறுப்பதற்கு மேலிட உத்தரவு என்ற ஒரு காரணத்தை கூறுகிறது. எந்த மேல் இடத்திலிருந்து உத்தரவு வந்தது? பெரியார் அம்பேத்கரை தங்களின் கொள்கைத் தலைவராக அறிவித்துக் கொள்ளும் த.வெ.க ஆட்சி அவர்கள் வலியுறுத்திய கொள்கைக்கு எதிராக செயல்படுவதை வன்மையாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கண்டிக்கிறோம்.**

**கழகப் பொதுச்செயலாளரின் அறிக்கை 'திவிக தென்சென்னை' முகநூல் பக்கத்தில் செய்தி கார்டு வடிவில் பகிரப்பட்டிருந்த நிலையில், அதனை இந்தியாவில் யாரும் பார்க்க முடியாத வகையில் முடக்கியுள்ளது முகநூல் நிர்வாகம். முடக்கப்பட்டதற்கான காரணத்தில், 'இந்தப் பதிவைத் தடுக்கச் சொல்லி வந்த ஒரு சட்டப்பூர்வக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டு முடக்கியுள்ளோம்' என பதிலளித்துள்ளது முகநூல் நிர்வாகம். தடை செய்யச்சொல்லி கோரிக்கை வைத்தது தமிழ்நாடு அரசா? அல்லது ஒன்றிய அரசா? என்பது இன்னும் தெரியவில்லை. எனினும், கருத்துரிமைக்கு எதிரான மிகமோசமான இந்த நடவடிக்கை வன்மையாக கண்டிக்கத்தக்கது. இச்செயலுக்கு தமிழ்நாடு டிஜிட்டல் ஊடலவியலாளர்கள் சங்கமும் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.**

## தலையங்கம்

# தமிழ்நாட்டில் மாடு வெட்டத் தடையா?

பொது இடங்களில் மாடுகளை வெட்டத் தடை செய்து மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதிகள் ஜி. ஆர். சுவாமிநாதன் மற்றும் லட்சுமி நாராயணன் அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது. வழக்கைத் தொடர்ந்தவர் சூரிய பிரகாஷ் என்ற இந்து மக்கள் கட்சியின் இளைஞர் அணி பொதுச் செயலாளர். பக்ரீத் பண்டிகையை ஒட்டி மாடுகள் வெட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு தொடரப்பட்ட வழக்கு இது. பொது இடங்களில் ஆடுகளை வெட்டலாம்; கோழிகளை வெட்டலாம்; ஆனால் மாடுகளை மட்டும் வெட்டக்கூடாது என்பதற்கு என்ன காரணம்? மதம் சார்ந்த பார்வைதான்! உலகம் முழுதும் மக்கள் விரும்பி சாப்பிடும் உணவு மாட்டுக்கறி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மாடு வெட்டுவதற்கோ; மாட்டுக்கறி உண்பதற்கோ இதுவரை எந்தத் தடையும் இல்லை.

பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 20-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் மாடு வெட்டத் தடைச் சட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் அப்போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்த நிலையில் சட்டத்தைத் திரும்பப் பெற்றார். 1976-ஆம் ஆண்டு பசுவதைத் தடை அரசாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், 2020-ல் உயர்நீதிமன்றம் பொதுஇடங்களில் மாடுகளை வெட்ட தடை செய்ததாகவும் நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் நடைமுறையில் தமிழ்நாட்டில் எந்தத் தடையும் இல்லாமல் மாடுகள் வெட்டப்பட்டே வருகின்றன.

உணவு உரிமையில் மதத்தை திணிப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலே ஆகும். பசுவின் புனித கோட்பாடு மிக பிற்காலத்தில் உருவானது. வேதத்தில் குறிப்பாக "ரிக்' வேதத்தில் பார்ப்பனர்கள் மாட்டுக்கறி மட்டுமல்ல; குதிரைக்கறியையும் சுவைத்து உண்டது குறிப்பிடப்பட்டுள்ளது. யாகத்தில் பொசுக்கி கொல்லப்பட்ட பசுவின் ஒவ்வொரு உறுப்பையும் யார் யாருக்கு பங்கிட வேண்டும் என்று "ஐநரேய ப்ராஹ்த்மணம்" உபநிஷத்து (வேதங்களுக்கு தந்த விளக்க உரைகள்). கூறுகிறது. வேதங்களுக்கான நீதி நூல்கள் என்று கூறப்படும் மனுஸ்மிருதி பசு மாமிசம் சாப்பிடுவதை ஆதரிக்கிறது. ( 27-லிருந்து 31வது ஸ்லோகம் வரை). வால்மீகி ராமாயணம் ராமனும் முனிவர்களும் பசுமாமிசம் சாப்பிட்டதை விளக்குகிறது. பார்ப்பனர்களின் அரசியல் தலைவரான ராஜகோபாலாச்சாரி என்னும் ராஜாஜி எழுதிய ராமாயணத்திலும் ராமன் பசுமாட்டுக் கறியை சாப்பிட்டதை சுட்டிக்காட்டுகின்றார். இறந்து போன காஞ்சி மடத்தின் மூத்த சங்கராச்சாரியான சந்திரசேகரேந்திர சரஸ்வதி யாகத்தில் பசுக்கள் எரிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு அதில் தவறு இல்லை என்று கூறி இருக்கிறார்.

> தர்மத்துக்காகச் செய்ய வேண்டியது, எப்படி யிருந்தாலும் பண்ண வேண்டும்; ஹிம்ஸையென்றும் பார்க்கக் கூடாது. யுத்தத்தில் சத்ருவதம் பண்ணுவதை ஸகல ராஜ நீதிப் புஸ்தகங்களும் ஒப்புக் கொள்ள வில்லையா? கொலைகாரனுக்குத் தூக்கு தண்ட னையைச் சட்ட புஸ்தகமே விதிக்கிறதல்லவா? அப்ப லோகத்தில் பல பேருக்குப் புரிய ஷேமத்தைத் தேவர்கள் செய்ய வேண்டுமென்ற உசந்த நோக்கத்தில் அவர்களுக்குப் பசு ஹோமம் பண்ணுவதிலும் தப்பேயில்லை."
>
> – (தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகம்).

மாட்டுக்கறி உணவை புனிதமாகவும் யாகத்திற்கு உரியதாகவும் கருதிய பார்ப்பனர்கள் பிறகு தங்கள் கருத்தை இப்படி மாற்றிக் கொண்டதற்கு என்ன காரணம்?

புத்த மார்க்கத்தின் பேரெழுச்சிதான் அதற்கு முக்கிய காரணம். யாகங்களில் கால்நடைகளைப் பலியிட்டு விவசாயத்திற்கு நெருக்கடியை உருவாக்குவதை புத்தர் கடுமையாக எதிர்த்தார். புத்த மார்க்கத்திற்கு மக்களின் பேராதவு கிடைத்தது. பிறகு புத்த மார்க்கத்தில் ஊடுருவி அதை சிதைத்த பார்ப்பனர்கள் மாடுகளுக்கு புனித அடையாளம் தந்தனர். மாட்டுக்கறி சாப்பிடும் பழக்கத்திலிருந்து மீள முடியாத நிலையில் அதன் சிறுநீரை கோமியம் என்றும் பாலை சிறந்த உணவாகவும் ஏற்றி போற்றத் தொடங்கினர் என்கிறார் அம்பேத்கர். பார்ப்பனரல்லாத உழைக்கும் இந்து மக்களின் உணவாக மாட்டுக்கறி இருக்கிறது. ஆனால் வேத, பார்ப்பனியத்திற்கு கட்டுப்பட்டு கிடக்க வேண்டியதே 'சூத்திர,பஞ்சமர்' என்ற பார்வையோடு தான் மாட்டுக்கறி உணவை பார்ப்பனர்கள் எதிர்த்து கொண்டு இருக்கிறார்கள்.

மதுரை உயர்நீதிமன்ற கிளையின் இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும். மேல்முறையீடு செய்யும் என்று சிறுபான்மைத்துறை அமைச்சர் ஷாஜகான் கூறியிருப்பதை வரவேற்கிறோம். அது வெறும் பேச்சோடு நின்று விடக்கூடாது; செயல்படுத்த வேண்டும்.

## தமிழ்நாடு மக்கள் உரிமை பேரவை வலியுறுத்தல்

# கீழடி அகழாய்வு அறிக்கையை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்

அமர்நாத் இராதகிருஷ்ணன் தந்த கீழடி அகழாய்வு ஆய்வு அறிக்கையை முடக்கி வைக்காமல் ஒன்றிய அரசு உடனே வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு மக்கள் உரிமை பேரவை ஒருங்கிணைப்பாளர் கண.குறிஞ்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பழ.நெடுமாறன், முன்னாள் நீதிபதி அரிபரந்தாமன், ஓவியா உள்ளிட்ட 70-க்கும் மேற்பட்டோர் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். அறிக்கையின் விவரம்.

2014 - 2016 காலகட்டத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் ( Archeological Survey of India - ASI ) சார்பாகக் கீழடி அகழாய்வு, தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களால் மேற்கொள்ளப் பட்டது. கீழடியில் கிடைக்கப் பெற்ற பொருட்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் 982 பக்கங்கள் கொண்ட அறிக்கையினை அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்திற்கு 2023 ஜனவரி மாதத்தில் முறைப்படி சமர்ப்பித்துள்ளார். அறிவியல் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் கீழடியின் காலம் கி.மு.800 - 500 வரை என்பதாக அவர் வரையறுத்துள்ளார்.

ஆனால், போதிய உண்மையான காரணங்களோ, மதிப்புயர் நியாயங்களோ இன்றி அமர்நாத் அவர்கள் சமர்ப்பித்த ஆய்வறிக்கையினை மறுத்து, அவரின் ஆய்வறிக்கையை மேம்படுத்தி அனுப்புமாறு இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அவருக்கே திருப்பி அனுப்பியது. இந்த அறிக்கையை அனுப்பிய இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் உறுப்பினர் குழுவில் உள்ள எவரும் கீழடிக்கு வந்ததே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் தனக்கு அனுப்பிய அறிக்கை செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்ப அடிப்படையில் உருவாக்கப் பட்டதாக அமர்நாத் அவர்கள் தெளிவு படுத்துகிறார். பல்வேறு தரவுகளின் அடிப்படையில் கீழடியின் தொன்மையைக் கணித்த அமர்நாத் அவர்களின் காலத்தை இந்தியத் தொல்லியல் ஆய்வகம் ஏற்கத் தயாராக இல்லை. அதை மாற்ற வேண்டும் என அது வலியுறுத்துகிறது. இதுதான் இச்சிக்கலின் சாரம்.

ஆனால், எவ்விதப் புறச் செல்வாக்கிற்கும் உள்ளாகாமல், உண்மையான மற்றும் சரியான அறிக்கையைக் கடமை உணர்வோடும் மனச்சாட்சியோடும் சமர்ப்பித்ததாகக் கூறி, தனது ஆய்வறிக்கையை மாற்றி அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை என அமர்நாத் அவர்கள் திட்டவட்டமாக எழுத்து வடிவில் தெரிவித்து விட்டார். ஆனால் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அறிக்கையைத் திருத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருவதை ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துறைவாரியான கடிதப் போக்குவரத்தோடு இந்த முக்கியமான செய்தி முடங்கி விடுவது ஏற்புடையதல்ல! அமர்நாத் அவர்கள் தனது ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து மூன்று ஆண்டுகளாகியும் கீழடி ஆய்வறிக்கையை வெளியிடாமல் இருப்பது பெரும் ஐயத்தை உண்டாக்குகிறது. இதனால் உண்மை நிலை என்ன என்பதை அறிய முடியாமலும் இருக்கிறது. எனவே இத்தகைய குழப்பத்தைப் போக்கும் வகையில், அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களின் கீழடி ஆய்வறிக்கையின் மூலப்பிரதியை இந்தியத் தொல்லியல் ஆய்வகம் உடனடியாகப் பொதுவெளியில் வெளியிட்டு, அனைவரின் ஐயத்தையும் போக்க வேண்டும்.

மேலும், அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களின் நிலைப்பாட்டை ஆதரித்தும், இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் தொல்லியல் அறம், விதிகள், விழுமியங்களுக்கு எதிராகத் தமிழர் நாகரிகத்தின் தொன்மையை ஏற்க மனமின்றிச் செயல்படும் போக்கினைக் கண்டித்தும் முந்தைய மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்திருந்தது. தமிழகத்தின் தொன்மையை அறிவியல் வழியில் நிறுவும் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களின் கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் அரசும் உரிய அனைத்து வழிகளிலும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

கூட்டறிக்கை ஒருங்கிணைப்பு
கண. குறிஞ்சி (தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை)

# ஆலங்குளம் அருகே ஜாதிவெறி தாக்குதல் தமிழ்நாடு அரசு மவுனம் கலைக்க வேண்டும்!

## கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் வேண்டுகோள்

29.05.2026 அன்று தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகேயுள்ள நெட்டூர் கிராமத்தில் பட்டியல் இனத்தவர் இல்ல திருமணத்திற்கு பிளக்ஸ் பேனர் வைத்த விவகாரத்தில் ஏற்பட்ட சிறுவாக்குவாதம் தீவிரமடைந்து வன்முறை தாக்குதலாகி 8 பேருக்கு அரிவாள் வெட்டு என இன்று தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியாவின் பிற பகுதியிலும் பேசு பொருளாகியுள்ளது. கண்ணில் பட்டோரை எல்லாம் வெட்டிப்போடும் அளவிற்கு அங்கு என்ன நடந்தது என விசாரிக்கும் போது பிளக்ஸ் பேனர் கதையினை சொல்கிறார்கள். பட்டியலின இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட கொலைவெறி தாக்குதலில் 6-பேர் கடும் காயங்களோடு நெல்லை அரசுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூர்மையான ஆயுதங்களோடு 10-க்கும் மேற்பட்ட நபர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

ஒரு இளைஞரது கைவிரல் துண்டிக்கப்பட்டுள்ளது. கால், கை என காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடந்தேறியுள்ளது. இதுவரை 8 நபர்கள் கைது செய்யப்பட்டு உள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் நெட்டூர் பகுதியில் தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமலிருக்க நிரந்தர தீர்வை ஆலோசித்து தமிழ்நாடு அரசு நடைமுறைபடுத்த வேண்டும்.

நெட்டூர் சுற்றுவட்டாரங்களில் கல்வி இடை நிற்றல் அதிகம் என்பதாலும் போதைக்கு அடிமையாவதும் தான் முக்கியகாரணம் என்பதை அறியமுடிகிறது. இதில் கவனம் செலுத்தினால் மட்டுமே தொடர் கலவரங்கள் போன்ற வன்முறைகள் நடைபெறாமலிருக்கும். ஜாதிக்கு எதிரான பரப்புரையை அரசு செய்திட வேண்டும். ஜாதி கௌரவம் என பேசும் இளைஞர்களிடம் ஜாதி இழிவு என்பதை புரிய வைக்க வேண்டும். உழைக்கும் மக்கள் ஒருவருக்கொருவர் வெட்டிக் கொல்வதை நாகரீக சமூகமாக நாம் பார்க்க முடியவில்லை.

நெட்டூர் பகுதிகளில் உயர் கல்வியோ, பாலிடெக்னிக், அய்.டி.அய். போன்ற எந்த கல்வி நிறுவனமும் இல்லை. அதனை அமைக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும். மக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய நெட்டூரில் காவல் நிலையம் அமைத்திட வேண்டும்; காவல்துறை தொடர் கண்காணிப்பில் இப்பகுதி இருக்க வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம். இந்த குற்றச் செயலில் ஈடுபட்டவாகள் மீது விரைவான விசாரணை, விரைவான தண்டனை என்பதை உறுதி செய்ய வேண்டும். இளம் சிறார்களும் இந்த ஜாதிவெறியாட்டத்தில் பங்குபெற்றிருப்பதை அரசு கூர்ந்து கவனிக்க வேண்டும். தற்போதைய சம்பவத்திற்கு தக்க நடவடிக்கையும் நிரந்தர தீர்விற்கு ஒரு குழு அமைத்து விசாரித்து அதன் பரிந்துரையை நடைமுறைபடுத்துவதன் மூலமே இந்த ஜாதிய கலவரங்களை தடுக்க முடியும். வழக்கப்போல் கடந்த கால ஆட்சியாளர்கள் மீது குற்றம் சுமத்தாமல் தமிழ்நாடு அரசு மௌனம் கலைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# நீட்தேர்வு நடத்தும் அமைப்பின் படுதோல்விகள்

## ஊழலில் பதவிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிக்கு பதவி உயர்வு வழங்கிய மோடி ஆட்சி!

*2026 மே 3 அன்று, இந்தியாவின் ஒருங்கிணைந்த மருத்துவ இளநிலைப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வான 'நீட்' நடத்தப்பட்டது. பல மாதங்களாகவும், பல ஆண்டுகளாகவும் கடுமையாக உழைத்த மாணவர்கள் தேர்வு முடிந்த மகிழ்ச்சியை சமூக ஊடகங்களில் கொண்டாடினர்.*

*ஆனால் இரண்டு வாரங்களுக்குள் அந்த மகிழ்ச்சி துயரமாக மாறியது. மே 12 அன்று, "கெஸ் பேப்பர்" பரவியதாகவும், தேர்வில் பல முறைகேடுகள் நடந்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்து தேசியத் தேர்வு முகமை (என்.டீ.ஏ) நீட்-2026 தேர்வை ரத்து செய்தது. அதன்பின்னர் மனஉளைச்சலால் குறைந்தது 4 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வெளியாகின.*

**★ நீட்தேர்வு இரத்து செய்யப்பட்டு மீண்டும் நடத்துவது 2-வது முறை.**

**★ மீண்டும் தேர்வை சந்திக்க இயலாது என்று தற்கொலை செய்த மாணவர்கள் 4 பேர்.**

**★ தேர்வு நடத்துவதைவிட வணிக கொள்ளை நடத்துவதே இதன் நோக்கம்.**

**★ ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகுவாரா?**

*ராஜஸ்தானின் சிகார் மாவட்டத்தைச் சேர்ந்த 22 வயதான பிரதீப் மேக்வால், கடந்த 3-ஆண்டுகளாக 'நீட்' தேர்வுக்காக தயாராகி வந்தார். இந்த ஆண்டு சிறந்த மருத்துவக் கல்லூரியில் இடம் பெறுவேன் என்ற நம்பிக்கையுடன் இருந்த அவர் தற்கொலை செய்து கொண்டார்.*

*உத்தரப் பிரதேசத்தின் லகிம்பூர் கேரியைச் சேர்ந்த 21 வயது ரித்திக் மிஸ்ரா, இது அவரது மூன்றாவது முயற்சி. பல ஆண்டுகால உழைப்பு வீணானதாக உணர்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். டெல்லியின் ஆசாத்பூரைச் சேர்ந்த 20 வயது அன்ஷிகா பாண்டே, 2025-இல் வெறும் நான்கு மதிப்பெண்கள் வித்தியாசத்தில் மருத்துவ இடத்தை இழந்திருந்தார். இந்த ஆண்டும் மூன்றாவது முறையாக தேர்வு எழுதிய அவர், தேர்வு ரத்து செய்யப்பட்டதனன் மனஅழுத்தத்தால் உயிரிழந்தார்.*

*கோவாவில் 17 வயது மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் அழுத்தத்தையும், ஹாக்கி மீதான தனது ஆர்வத்தையும் சமநிலைப்படுத்த முடியாத மனவேதனையை அவர் எழுதிய கடிதம் வெளிப்படுத்தியது.*

*இந்த மரணங்கள், பல ஆண்டுகளாக வினாத்தாள் கசிவுகள் மற்றும் தேர்வு முறைகேடுகள் மூலம் தொடர்ந்து வெளிப்பட்டு வரும் கல்வி அமைப்பின் ஆழமான சீரழிவை எடுத்துக்காட்டுகின்றன. தேர்வு ரத்து செய்யப்பட்டதால் சுமார் 22.8 லட்சம் மாணவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 13.32 லட்சம் பேர் (58%) பெண்கள். இவர்கள் அனைவரும் வெறும் 59,416 மருத்துவ இடங்களுக்காக போட்டியிட்டனர்.*

*இது தேசிய தேர்வு முகமைய சுற்றிய முதல் சர்ச்சை அல்ல. 2024 ஆம் ஆண்டிலும் 'நீட்' தேர்வுக்குப் பிறகு பீகார் மற்றும் ஜார்கண்டில் வினாத்தாள் கசிந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. பலர் கைது செய்யப்பட்டனர். மேலும், 720/720 என்ற முழு மதிப்பெண்ணை 67 மாணவர்கள் பெற்றது சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவர்களில் பலர் ஒரே தேர்வு மையத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது. சில மையங்களில் நேர இழப்புக்கான இழப்பீடாக 1,563 மாணவர்களுக்கு "சலுகை (கிரேஸ்) மதிப்பெண்களை தேர்வு நடத்தும் என்.டி.ஏ வழங்கியது. சலுகை மதிப்பெண்கள் முறைகேடாக வாரி வழங்கப்பட்டன என்று பொதுமக்கள் எதிர்ப்பும், சட்டப் போராட்டங்களும் அதிகரித்ததால் அரசு பின்னர் அந்த சலுகை மதிப்பெண் முறை ரத்து செய்தது.*

*2024 ஜூலையில், அப்போதைய இந்திய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான உச்சநீதிமன்ற அமர்வு, நாடு முழுவதும் மீண்டும் தேர்வு நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை விசாரித்தது. வினாத்தாள் கசிவு நடந்தது உண்மை என்றாலும், முழுமையாக தேர்வு அமைப்பு முற்றிலும் சீர்குலைந்ததற்கான ஆதாரம் இல்லை என்று நீதிமன்றம் கூறியது. எனவே, கோடிக்கணக்கான மாணவர்களை பாதிக்கும் வகையில் தேர்வை முழுமையாக ரத்து செய்ய மறுத்தது.*

*தேர்வு முகமை தலைவர் ஒன்றிய அரசு சி.பி.அய் விசாரணையைத் தொடங்கியது. என்.டி.ஏ தேர்வு நடைமுறைகளை சீர்திருத்த உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டது. 2024 ஜூன் 22 அன்று என்.டி.ஏ தலைவர் சுபோத் குமார்சிங் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். திறமையற்ற நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்ட அந்த அதிகாரிகளுக்கு அதே மாதங்களிலேயே உயர்பதவியில் அமர்த்தியது ஒன்றிய ஆட்சி. அதே ஆண்டு அக்டோபரில் அவர் மத்திய எஃகு அமைச்சகத்தில் கூடுதல் செயலாளராக நிதித்துறை ஆலோசகர் என்ற பதவியில் நியமிக்கப்பட்டார். பின்னர் தனது சொந்த மாநிலமான சத்தீஸ்கருக்கு மாற்றப்பட்டார். தற்போது அவர் சத்தீஸ்கர் முதலமைச்சர் விஷ்ணு தேவ் சாய் அவர்களின் முதன்மைச் செயலாளராகவும், மாநில எரிசக்தித் துறையின் கூடுதல் பொறுப்பாளராகவும் பணியாற்றுகிறார். பலரின் பார்வையில் இது அதிகாரப்பூர்வ மறுவாழ்வு (bureaucratic rehabilitation) எனக் கருதப்படுகிறது. நீட் மறுதேர்வு ஜூன் 21 அன்று நடைபெற உள்ளது. மாணவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா உள்ளிட்ட பல மாநிலங்களில் செயல்பட்டதாகக் கூறப்படும் "தேர்வு மோசடிக் கும்பலின் வலையமைப்பை சி.பி.அய் விசாரித்து வருகிறது. ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி மய்ய உரிமையாளர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

### ரூ.448 கோடி லாபம்

*உயர் கல்வி நுழைவுத் தேர்வுகளை திறம்பட நடத்துவதற்காக தன்னாட்சி அமைப்பாக உருவாக்கப்பட்ட தேர்வுமுகமையான என்.டி.ஏ, பொதுச் சேவை நிறுவனமாக அல்லாமல், வருவாயை அதிகப்படுத்தும் வணிகக் கொள்ளை அமைப்பாகவே செயல்பட்டு வருவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். 2023-ஆம் ஆண்டுக்கான மாநிலங்களவை குழு அறிக்கையின்படி, தேர்வுக் கட்டணங்கள் மூலம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வசூலித்த இந்த அமைப்பு, தேர்வுகளை நடத்துவதற்கு மிகக் குறைந்த அளவிலேயே செலவிட்டுள்ளது. 2024 ஜூலை 31 அன்று மாநிலங்களவையில் கல்வி இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார் அளித்த பதிலின்படி, 2018 முதல் 2024 வரை இந்த அமைப்பு ரூ.448 கோடி லாபம் ஈட்டியுள்ளது.*

*ஜே.என்.யூ கல்வி ஆய்வு மைய பேராசிரியர் சுரேஷ் பாபு கூறுகையில்: "ஊழல் போன்ற விஷயங்களில் அரசு பொறுப்பேற்க வேண்டும். தேர்வு அமைப்பின் மீதான நம்பிக்கை சிதைந்தால், அது இந்தியாவின் கல்வி மற்றும் ஜனநாயகத்தின் எதிர்காலத்தையே பாதிக்கும்." மாணவர்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பிக்கை இடைவெளி அதிகரித்து வருவதாகவும், இது வங்கதேசம் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் இளைஞர்கள் வழிநடத்திய போராட்டங்களை நினைவூட்டுவதாகவும் அவர் எச்சரித்தார்.*







### கணினி வழித்தேர்விலும் முறைகேடு

*2026 மே 15 அன்று கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், 2027 முதல் நீட்தேர்வு முழுமையாக கணினி வழியில் நடத்தப்படும் என்று அறிவித்தார். ஆனால், கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு இது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். 2024-25 கல்வியாண்டுக்கான கல்வி அமைச்சக அறிக்கையின்படி: இந்திய அரசுப் பள்ளிகளில் 60% பள்ளிகளுக்கு மட்டுமே கணினி வசதி உள்ளது. 58% பள்ளிகளுக்கு மட்டுமே இணைய இணைப்பு உள்ளது. எனவே, இந்த மாற்றம் கல்வி அணுகலை ஜனநாயகப்படுத்துவதற்குப் பதிலாக நகர்ப்புற-கிராமப்புற மற்றும் பணக்காரர்-ஏழை இடைவெளியை மேலும் அதிகரிக்கக்கூடும்.*

*'நீட்'-ன் அடிப்படை குறையை முன்னாள் நேஷனல் அகாடமி ஆஃப் லீகல் ஸ்டடீஸ் அண்ட் ரிசர்ச் (NALSAR). துணைவேந்தர் பேராசிரியர். (டாக்டர்) ஃபைசான் முஸ்தபா கூறுகையில்:*

*'நீட்' போன்ற பொதுநுழைவுத் தேர்வுகள் உயர்குடி (elitist) தன்மை கொண்டவை. பயிற்சி மையங்களுக்கு பணம் செலுத்த முடிந்தால் வெற்றி பெறலாம். கிராமப்புற மாணவர்களும் தாய்மொழியில் படிக்கும் மாணவர்களும் தானாகவே பின்தள்ளப்படுகின்றனர்." மேலும் அவர் கூறியதாவது: 'நீட்' ஒரு மாணவரின் இயற்பியல், வேதியியல், உயிரியல் அறிவை மட்டும் சோதிக்கிறது. ஆனால் அவர் ஒரு நல்ல மருத்துவராக உருவாக தேவையான இரக்கம், மனிதநேயம், நடைமுறைத் திறன் ஆகியவற்றை அளவிடுவதில்லை."*

*தேசிய தேர்வு முகமை (என்.டீ.ஏ) என்ற அமைப்பு நீட்,கியூட் உள்ளிட்ட தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை நடத்தி வருகிறது. அத்தனை தேர்வுகளிலும் முறகேடுகள் அம்பலமாகி வருகின்றன.*

***– ( பிரண்ட் லைன் ஜீன் – 2026, ஆங்கில இதழில் வெளிவந்த கட்டுரை)***



ஆசிரியர் சண்முகசுந்தரம் அவர்களின் தந்தையார் சென்னியப்பன் (73) அவர்கள் உடல் நலக்குறைவின் காரணமாக சில நாட்களுக்கு முன்பு முடிவெய்தினார். 17.05.26 அன்று இரவு நசியனூர் சாமிக்கவுண்டன் பாளையத்தில் உள்ள சண்முகசுந்தரம் இல்லத்துக்கு சென்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆறுதல் தெரிவித்தார்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

## எதையும் ஏன்? என்று கேள்வி கேள்!

# குழந்தைகள் மகிழ்வு பழகுமுகாம்



தமிழ்நாடு மாணவர் கழகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றம் இணைந்து நடத்திய குழந்தைகள் பழகு மகிழ்வு ஒரு நாள் முகாம் 30.05.2026 சனிக்கிழமை கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது.

சுகந்தன் பிரபாகரன் (தமிழ்நாடு மாணவர் கழகம்) தலைமை வகித்தார். செ.யாழ் இன்பன் (தமிழ்நாடு மாணவர் கழகம்) முன்னிலையில் நடைபெற்றது.

முதல் வகுப்பாக தன்னை அறிதல் என்ற தலைப்பில் 'சிறார் நண்பன்' ஆனந்த் குழந்தைகள் தாங்கள் யார்? தங்களின் அடையாளம் என்ன? வாழ்வில் தாங்கள் அடையவேண்டிய இலக்குகளை எவ்வாறு திட்டமிடுவது? என்பது குறித்து ஒரு கலந்துரையாடலாக, செயல்பாடுகளுடன் வகுப்பு நடைபெற்றது.

ஏனென்று கேள்வி கேள்? என்ற தலைப்பிலான வகுப்பை தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி நடத்தினார். சமூகத்தில் நம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை எழுப்பி அதற்கு பதிலையும் பெற வேண்டும் என்பதனை குழந்தைகள் அறிந்து கொள்ளும் வகையில் செயல்பாடுகள், கதைகள் மூலம் வகுப்பு எடுத்தார். உணவு இடைவேளைக்குப் பின்னர் காவை.இளவரசன் மந்திரமில்லை! தந்திரமே என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சிகளை குழந்தைகளின் பங்கேற்புடன் சிறப்பாக நடந்தது. இறுதியாக முகாம் குறித்த குழந்தைகளின் கருத்துகள் கேட்டறியும் மீளாய்வு நடைபெற்றது.

நிகழ்ச்சியில் குழந்தைகளுக்கு மதிய உணவு, தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி குழந்தைகளுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். முகாமில் 32 குழந்தைகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

குழந்தைகளுக்கு நினைவுப் பரிசாக எவர்சில்வர் நீர்க்குடுவைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாணவர் கழகத் தோழர்கள் சுகந்தன் பிரபாகரன், யாழ் இன்பன் , நாகராஜ் , சு.அன்புமலர் ஆகியோர் செய்தனர். நிகழ்ச்சியில் கருத்தாளர்களாகச் செயல்பட்ட சிவகாமி, சிறார் நண்பன் ஆனந்த் , இளவரசன், சுதா ஆகியோரின் சிறப்பான செயல்பாடுகளால் முகாம் மகிழ்வுடனும் கொண்டாட்டமாகவும் பயனுள்ளதாகவும் நடைபெற்றது. செல்வேந்திரன், காவலாண்டியூர் ஈஸ்வரன், எஸ்.எம்.டி பிரபு ஆகியோர் உரிய வழிகாட்டுதல்களை மேற்கொண்டனர்.

இறுதியாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் சு.அன்புமலர் நன்றி கூறினார். கொளத்தூர், மேட்டூர் உக்கம்பருத்திக்காடு காவலாண்டியூர், நங்கவள்ளி, இளம்பிள்ளை, சேலம் கேம்ப் ஆகிய பகுதி தோழர்களும், பொறுப்பாளர்களும் இந்தப் பழகு முகாமில் கலந்து கொண்டனர்.

## சமூக மாற்றத்துக்கான சவால்கள் கருத்தரங்கம்; கழகத் தலைவர் பங்கேற்பு!

பாபா சாகேப் அம்பேத்கர், தந்தை பெரியார், மார்க்ஸ் அறிவு மேடையின் சார்பாக சமூக மாற்றத்தின் இன்றைய தேவைகளும், எதிர்கொள்ளும் சவால்களும் என்ற தலைப்பில் 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சேலம், டவுன் ரயில்நிலையம் பகுதியில் அமைந்துள்ள ஆர். பி. மஹாலில் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி மா. லெ. மா மாவட்டச் செயலாளர் மு. மாரியப்பன் வரவேற்புரையாற்றினார். மக்கள் தேசம் கட்சியின் மாநில செயலாளர் சி. சுலைமான் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில துணை பொதுச்செயலாளர் சந்தியூர் இரா. பார்த்திபன் மார்க்சியத்தின் பார்வையில் அரசியல் அதிகாரம் என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.




தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் பாலன் மதவாத அரசியலும், மார்க்கியமும் சர்வதேச பாதையும் என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்திய ஒன்றியமும், மாநில சுயாட்சியும் என்ற தலைப்பில் பேசுகையில் இந்திய ஒன்றியம் என்பது பல்வேறு மாநிலங்களின் கூட்டமைப்பு பற்றியும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் பன்முகத்தன்மையைக் காக்க அதிகாரப் பகிர்வை உறுதி செய்வதையும் 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்பதே இதன் அடிப்படைக் கோட்பாடு என்பதை இளைஞர்களுக்கு எடுத்துரைத்தும், மேலும் "பேரறிஞர் அண்ணா" சொன்னது போல் பிரிவினை கோரிக்கையை கைவிட்டு விட்டோம்; ஆனால் பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே தான் இருக்கும் அதை விரைவில் தீர்க்கப்படாவிட்டால் அது வேறுவிதமான காரணங்களுக்கு போய் சேரும் எனவே அது விரைவில் தீர்க்கப்படவில்லை என்றால் அதற்கான தீர்வு என்ன? என்பதை நாம் எல்லாம் சிந்திப்போம்! அதற்கான குரலை எழுப்புவோம் அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; என்று கூறி கருத்துரையாற்றினார்.

இறுதியாக புஇமு மாவட்டப் பொறுப்பாளர் வின்சென்ட் நன்றியுரையாற்றினார். கராத்தே மாஸ்டர் ராஜதுரை செல்வம், ஓமலூரில் 21 கி.மீ சிலம்பம் சுழற்றிக்கொண்டே நடந்தும், ஓடியும் உலக சாதனை படைத்துள்ளார், அவர் கழகத் தலைவரை சந்தித்து வாழ்த்து பெற்றார். சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மாநகரச் செயலாளர் ஆனந்தி, மாநகர அமைப்பாளர் தேவராஜ், அவினாசி ஆகிய கழகத் தோழர்கள், தமிழ்நாடு கிக் பாக்சிங் அசோசியேசன் துணை பொதுச்செயலாளர் தனசேகரன், மக்கள் தேச கட்சியினர், தமிழ்நாடு மாநில பகுஜன் சமாஜ் கட்சியினர் மற்றும் புரட்சிகர இளைஞர் முன்னனியினர் கலந்து கொண்டனர்.

## தமிழீழ எழுத்தாளர்களின் நூல்கள் அறிமுகம்!

புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழக இளைஞரணி சார்பில் 2009 மே-18 தமிழ் இன அழிப்பு நாள் நினைவுகளோடு, "தமிழீழ வரலாற்றில் பெண் புலிகள் நூல்கள் அறிமுகம் நிகழ்ச்சி" 18.05.2026 திங்கட்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் புதுச்சேரி, மறைமலை அடிகள் சாலை, தோழமை ஒன்றுகூடல் அலுவலகத்தில் நடைபெற்றது. புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழக இளைஞரணி தலைவர் அன்பு எழிலன் வரவேற்புரையாற்றினார்.




எந்த வித எதிர்பார்ப்புமின்றி பெரியாரிய கொள்கைக்காக கழகப் பணிகளை செய்தும், கொள்கைக்காக பல வழக்குகளை சந்தித்து சிறைக்குச் சென்ற தோழர். கடலூர் தாமரைகண்ணன் முயற்சியில் தமிழ் ஈழ எழுத்தாளர்களின் எழுத்துக்கள் நூல் வடிவம் பெறுகின்றன. அவருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் புதுச்சேரி மாநில தலைவர் லோகு. அய்யப்பன் பாராட்டி சால்வை அணிவித்தனர்.

"கஸ்தூரியின் ஆக்கங்கள், வானதியின் கவிதைகள், மேஜர் பாரதி எழுதிய காதோடு சொல்லிவிடு, தமிழீழ தியாகச்சுடர் அன்னைபூபதி, கனவுக்கு வெளியேயான உலகு, தமிழீழ பெண்களின் சிறுகதைகள் 'வழி', வேர்கள் துளிர்க்கும், பெண்களும் புரட்சியும், மார்ச் 8 அனைத்துலகப் பெண்கள் நாள், கட்டுநாயக்கா தாக்குதல் வெற்றி" ஆகிய நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. தோழமை இயக்கத் தோழர்கள் பலர் நூல்களைப் பெற்றுக்கொண்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூல்களை வெளியிட்டு பேசுகையில் நடந்துவிட்ட அவலம் என்பதை நினைவு கூறுவது நமது நோக்கம் அல்ல!. நடந்த அவலங்களுக்கு தீர்வு காண்பதற்கு நாம் என்ன செய்யலாம்? என்பதை சிந்திக்கும் நிகழ்ச்சியாக இந்நாளை கருதி, மீண்டும் ஈழமக்களை இணைக்கவும்;. நியாய உணர்வுள்ள உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதும்; நடத்த கொடுமைகளுக்கு நடவடிக்கை தேவை என்பதே நமது கோரிக்கையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். நிறைவாக புதுச்சேரி மாநில தலைவர் லோகு. அய்யப்பன் உரையாற்றி கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 04, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran